

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.2.2025) சென்னை தலைமைச் செயலகத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் மதி அனுபவ அங்காடியினை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்பி.மூர்த்தி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ச. திவ்யதர்சினி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி சிங், ஆகியோர் உடனிருந்தனர்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பனை, புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்பொருள் பாதுகாப்புத்துறை அரசு முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு. நேற்று (10.02.2025) மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் அவர்களை, புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் க.நந்தகுமார். நேற்று (10.02.2025) மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

### வில்லிவாக்கம்,

# தேவி பாலியம்மன் திருக்கோயில் குடமுழுக்கு!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு பங்கேற்பு!

சென்னை,பிப்.11

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (10.02.2025) சென்னை, வில்லிவாக்கம், தேவி பாலியம்மன் திருக்கோயில் குடமுழுக்கு நன்னீராட்டு பெருவிழாவில் பங்கேற்று சிறப்பித்தார்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், குடமுழுக்கு நடைபெற்று 12 ஆண்டுகள் நிறைவுற்ற பின் ஆகமவிதிப்படி திருக்கோயில்களுக்கு மீண்டும் திருப்பணி மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொன்மையான திருக்கோயில்களை புனரமைத்து பாதுகாத்தல், திருக்கோயில் சொத்துக்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்தல், பக்தர்களுக்கு தேவையான வசதிகளை மேம்படுத்தி வழங்குதல் போன்ற பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், இன்று சென்னை, வில்லிவாக்கம், தேவி பாலியம்மன் திருக்கோயிலுக்கு உபயதாரர் நிதி ரூ.2.60 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் 7 திருக்கோயில்களுக்கும், இன்று கோயம்புத்தூர் மாவட்டம், அவிநாசி, தண்டுமாரியம்மன் திருக்கோயில், பேரூர், பட்டீஸ்வரர் திருக்கோயில், தஞ்சாவூர் மாவட்டம், புன்னைநல்லூர் மாரியம்மன் திருக்கோயில், ஒரத்தநாடு, உலகளந்த பெருமாள் திருக்கோயில், தேனி, கௌமாரியம்மன் திருக்கோயில், திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம், வெண்ணிகரும்பேஸ்வரர் திருக்கோயில், மதுரை, உசிலம்பட்டி, ஐராவதீஸ்வரர் திருக்கோயில், கோயம்பேடு, வைகுண்டவாச பெருமாள் திருக்கோயில் போன்ற ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்கோயில்கள் உட்பட 69 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக இதுவரை 2,580 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது.

இந்த அரசு பொறுப்பேற்றபின் ஒரே நாளில் அதிக எண்ணிக்கையில் குடமுழுக்குகள் நடைபெற்று வருகின்றன. 2023-ஆம் ஆண்டில் செப்டம்பர் 3 அன்று 44 திருக்கோயில்களுக்கும், 2024-ஆம் ஆண்டில் ஜனவரி 21 அன்று 45 திருக்கோயில்களுக்கும், ஜூலை 12 அன்று 65 திருக்கோயில்களுக்கும், செப்டம்பர் 8 அன்று 55 திருக்கோயில்களுக்கும், செப்டம்பர் 15 அன்று 98 திருக்கோயில்களுக்கும், 2025-ஆம் ஆண்டில் பிப்ரவரி 2 அன்று 69 திருக்கோயில்களுக்கும், நேற்று (10.02.2025) 69 திருக்கோயில்களுக்கும் குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது.

மேலும், ஆயிரம் ஆண்டுகள் தொன்மையான 43 திருக்கோயில்களும் புனரமைத்து குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. இப்படி எங்கு பார்த்தாலும் திருப்பணிகள், குடமுழுக்குகள் நடைபெற்று வருவதால் பக்தர்கள் மகிழ்ச்சியோடு இந்த ஆட்சி நீடிக்க வேண்டும் என்று வாழ்த்துகின்றனர். இது மேன்மேலும் எங்களுக்கு உற்சாகத்தையும், ஊக்கத்தையும் ஏற்படுத்துகின்றது.

மதுரை, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் பணிபுரியும் அர்ச்சகர்கள் பணி வரன்முறை செய்யப்படாத நிலையில் திருக்கோயிலுக்கு வருகை தருகின்ற பக்தர்களுக்கும், அர்ச்சகர்களுக்கும் இடையே சிறு பிரச்சனைகள் காரணமாக அப்போதைய ஆணையர் குமரகுருபரன் அவர்களால் அர்ச்சகர்கள் பணி வரன்முறை செய்யப்பட்டனர்.

இந்நிலையில் அர்ச்சகர்களாக ஒன்றுகூடி பக்தர்களிடம் இருந்து வருகின்ற காணிக்கையை உண்டியலில் செலுத்துவதென்று முடிவெடுத்து செயல்படுத்தி வந்தனர். அதில் ஏற்பட்ட சிறு பிரச்சனையின் காரணமாக அத்திருக்கோயிலின் செயல் அலுவலர் அவர்கள் தக்காரின் அனுமதி பெறாமல் ஒரு சுற்றறிக்கையை அனுப்பி இருக்கின்றார். அந்த சுற்றறிக்கை தேவையில்லாதது. அதுகுறித்து துறையின் கவனத்திற்கு வந்தவுடன் ஆணையர் அவர்கள் அந்த சுற்றறிக்கையை திரும்ப பெற உத்தரவிட்டதன் அடிப்படையில் அது திரும்ப பெறப்பட்டுவிட்டது. பிரச்சனையும் முடிவுக்கு வந்திருக்கிறது. செயல் அலுவலர் மீது விசாரணை மேற்கொள்ளவும் இணை ஆணையரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முடியாத எந்த பிரச்சனையாக இருந்தாலும் அரசின், துறையின் கவனத்திற்கு வந்தவுடன் அதனை முடிவுக்கு கொண்டு வந்து செயல்படுத்துகின்ற அரசு தான் இந்த அரசாகும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றி அழகன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், சென்னை மண்டல இணை ஆணையர் திருமதி ஜ.முல்லை, உதவி ஆணையர்கே.சிவகுமார், திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் பி.பாலசுப்பிரமணியம், உறுப்பினர்கள் கே.ராஜ்குமார், கே. ராகவன், திருமதி எஸ். வளர்மதி, டி.தாகூர் ஆதித்தியா, செயல் அலுவலர் சி.கணேஷ்குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### காஞ்சிபுரத்தில் புதிய மின்னணு மூலம்

# "நிறைந்தது மனம்" திட்டத்தில் குடும்ப அட்டை!

## மாவட்ட ஆட்சியரிடம் நன்றி தெரிவித்த பெண்!

காஞ்சிபுரம், பிப்.11-

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக மக்கள் நல்லுறவு மைய கூட்ட ரங்கில் நடைபெற்ற வாராந்திர மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் புதிய மின்னணு குடும்ப அட்டை வேண்டி மனு அளித்த மனு மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு புதிய மின்னணு குடும்ப அட்டையை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன் அவர்களிடம் பெற்ற திருமதி. சீதா "நிறைந்தது மனம்" திட்டத்தின்கீழ் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றிகளை தெரிவித்தார்.

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக மக்கள் நல்லுறவு மைய கூட்டரங்கில் நடைபெற்ற வாராந்திர மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நேற்று (10.2.2025) மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியரகத்தில் உள்ள மக்கள் நல்லுறவு மையத்தில் பிரதி திங்கட்கிழமை தோறும் பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, அம்மனுக்கள் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு வழங்கி தீர்வு காணப்பட்டு வருகிறது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமை வகித்து பொதுமக்களிடம் இருந்து 365 மனுக்களை பெற்று அவற்றின் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்கள்.

இன்று நடைபெற்ற வாராந்திர மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், காஞ்சிபுரம் மாவட்டம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி 2024-2025 ஆம் கல்வியாண்டில் கலைத்திருவிழா போட்டிகளில் மாநில அளவில் வெற்றி பெற்ற அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவ/ மாணவியர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் கோப்பைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கி, புதிய மின்னணு குடும்ப அட்டை வேண்டி மனு அளித்த திருமதி.சீதா அவர்களின் மனுமீது உடனடி நடவடிக்கை எடுத்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் குடும்ப அட்டை வழங்கி, பொதுமக்களிடம் மனுக்களை பெற்று, குறைகளை கேட்டறிந்தார்கள்.

புதிய மின்னணு குடும்ப அட்டையினை பெற்ற திருமதி.சீதா அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் முன்னிலையில் "நிறைந்தது மனம்" திட்டத்தின் மூலம் தெரிவிக்கையில்:

என் பெயர் திருமதி.சீதா நான் காஞ்சிபுரம், நெல்வாய் கிராமத்தில் வசித்து வருகிறேன். எங்கள் குடும்பத்திற்கு மின்னணு குடும்ப அட்டை இல்லாத காரணத்தால் அதனால் ரேஷன் பொருட்கள் வாங்க முடியாமல் மிகவும் சிரமப்பட்டு வந்தேன். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் மனு அளித்தேன். என் மனு மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, மாவட்ட வழங்கல் அலுவலகத்தின் மூலமாக இணையதளத்தில் பதிவேற்றம் செய்து புதிய மின்னணு குடும்ப அட்டையினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்கள். இந்த புதிய மின்னணு குடும்ப அட்டை கொண்டு வீட்டிற்கு தேவையான பொருட்களை நியாய விலைக்கடையில் பெறுவதற்கும், எங்களை போன்றவர்கள் அளிக்கும் மனுமீது உடனடியாக நடவடிக்கை எடுத்து எங்களின் கஷ்டங்களை நீக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கிறேன்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் செ.வெங்கடேஷ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. க.ஆர்த்தி, முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி. வெ. வெற்றிச்செல்வி, மாவட்ட வழங்கல் அலுவலர் சி.பாலாஜி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நேற்று (10.02.2025) காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக மக்கள் நல்லுறவு மைய கூட்டரங்கில் நடைபெற்ற வாராந்திர மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன், 2024–2025 ஆம் கல்வியாண்டில் நடைபெற்ற கலைத்திருவிழா போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ/மாணவியர்களுக்கு சான்றிதழ் மற்றும் கோப்பைகளை வழங்கினார்கள். உடன் முதன்மைக் கல்வி அலுவலர் வெ. வெற்றிச்செல்வி உள்ளார்.

### பெண்கள் தலைமையிலான சிறு-குறு நடுத்தர

# தொழில் நிறுவனங்கள் அதிகரிக்க ஒன்றிய அரசின் நடவடிக்கை என்ன?

## மாநிலங்களவையில் - எம்.எம்.அப்துல்லா கேள்வி!

புதுடெல்லி, பிப். 11-

பெண்கள் தலைமையிலான குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை அதிகரிக்க ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா கேள்வி எழுப்பினார்.



மாநிலங்களவையில் எம்.எம்.அப்துல்லா எழுப்பிய கேள்வி வருமாறு:

அதில் "கடந்த மூன்று ஆண்டுகளில் மாநில வாரியாக உத்யம் இணையத்தளத்தில் பதிவு செய்யப்பட்ட பெண்கள் தலைமையிலான குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான மொத்த நிலுவையில் உள்ள கடன்களில் 7% மட்டுமே பெண்கள் தலைமையிலான வணிகங்களுக்கு வழங்கப்பட்டது என்பது உண்மையா, அப்படியானால் கடந்த மூன்று ஆண்டுகளில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன என்றும் பெண் தொழில்முனைவோருக்கு நிதி ஆதாரங்களை எளிதாக அணுக உதவும் ஏதேனும் புதிய கொள்கைகளை ஒன்றிய அரசு செயல்படுத்தப்போகிறதா? என்றும் கேள்விகளை எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த இந்திய ஒன்றிய குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள்துறை இணையமைச்சர் சோபா கரன்ட்லஜே அவர்கள் "கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில் 12,45,126 பெண்கள் 'உத்யம்' இணையதளத்தில் தொழில் முனைவோராக தங்களைப் பதிவு செய்து கொண்டுள்ளனர். இந்திய ரிசர்வ் வங்கியின் நிதி உள்ளடக்கம் மற்றும் மேம்பாட்டுத் துறையால் நடத்தப்பட்ட ஆய்வின்படி, மார்ச் 31, 2023 நிலவரப்படி, திட்டமிடப்பட்ட வணிக வங்கிகளின் (வெளிநாட்டு வங்கிகள் மற்றும் கிராமப்புற வங்கிகள் தவிர) நிலுவையில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் மொத்த கடனில் பெண்களுக்குச் சொந்தமான நிறுவனங்களின் பங்கு 7.09% ஆக இருந்தது. ரிசர்வ் வங்கி அறிவித்தபடி, பொதுத் துறை வங்கிகள் செயல்படுத்துவதற்காக இந்திய அரசு 2000 ஆம் ஆண்டில் 14 அம்ச செயல் திட்டத்தை வரையறுத்தது. அதன்படி பொதுத்துறை வங்கிகள் தங்கள் நிகர வங்கிக் கடனில் 5 சதவீதத்தை பெண்களுக்குக் கடன் வழங்குவதற்காக ஒதுக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. பெண் தொழில்முனைவோர் வங்கிகளை எளிதாக அணுகுவதற்காகவும், பெண் தொழில்முனைவோரை அதிகரிக்கவும் வேண்டியே பெண் தொழில்முனைவோர்களுக்கான காப்பீடு 90% ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும் பெண் தொழில்முனைவோருக்கு வருடாந்திர உத்தரவாதக் கட்டணத்தில் 10% சலுகை வழங்கப்படுகிறது.

மேலும் பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் பண்ணைத் தொழில் அல்லாதவற்றிற்கு மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்படுகிறது. திட்டச் செலவில் 15% முதல் 35% வரையிலான மானியத்துடன் உற்பத்தித் துறையில் ரூ. 50 லட்சம் வரையிலும், சேவைத் துறையில் ரூ. 20 லட்சம் வரையிலும் கடன் வழங்கப்படுகிறது.

பெண்கள் உட்பட சிறப்புப் பிரிவுகளைச் சேர்ந்த பயனாளிகளுக்கு கிராமப்புறங்களில் 35% மற்றும் நகர்ப்புறங்களில் 25% ஆகவும் மானியம் வழங்கப்படுகிறது" என்று தெரிவித்தார்.

இவ்வாறு எம்.எம்.அப்துல்லா கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதிலளித்தார்.

### விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க.

# மகளிர் அணி - மகளிர் தொண்டரணி ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் க.பொன்முடி - கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்பு!

## மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கை!

விழுப்புரம், பிப்.11-

விழுப்புரம் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதம சிகாமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி தலைமையில் நாளை (12.02.2025 - புதன்கிழமை) காலை 10.30 மணிக்கு விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறுகிறது.

கழக துணைப் பொதுச் செயலாளர், வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, கழக துணைப் பொதுச்செயலாளர் - கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் க.கனிமொழி கருணாநிதி எம்.பி. கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

மாநில மகளிர் அணி செயலாளர் திருமதி ஹெலன் டேவிட்சன், மாநில மகளிர் தொண்டர் அணி செயலாளர் திருமதி நாமக்கல் ப.ராணி , மாநில மகளிர் தொண்டர் அணி இணை செயலாளர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார், மாநில மகளிர் அணி சமூக வலைத்தள பொறுப்பாளர் முனைவர் அ.ரியா ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் கூட்டத்தில், விழுப்புரம் (தெற்கு) மாவட்ட கழகத்தை சேர்ந்த மாநில - மாவட்ட - ஒன்றிய - பேரூர் - கிளைக் கழக மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் , கழக மகளிர் - மகளிர் தொண்டர் அணியினர் திரளாக கலந்துகொள்ளுமாறும்



நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில - மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றியக் கழக செயலாளர்கள் கலந்துகொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### கன்னியாகுமரி மாவட்டத்தில்

# மாற்றுத்திறன் பயனாளிகளுக்கு நலஉதவிகள்!

## மாவட்ட ஆட்சியர் வழங்கினார்!

கன்னியாகுமரி, பிப்.11-

மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் ரூ.7.47 இலட்சம் மதிப்பில் மாற்றுத்திறன் பயனாளிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா தலைமையில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று (10.02.2025) நடைபெற்றது.

நேற்று நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், பொது மக்களிடமிருந்து கல்வி உதவித்தொகை, பட்டா பெயர் மாற்றம், மாற்றுத்திறனாளி நல உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, குடிநீர் வசதி, சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் கோரி 315 கோரிக்கை மனுக்கள் இன்று பெறப்பட்டது. பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து தீர்வு காணுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர். அழகுமீனா துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

அதனைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர். அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் ரூ.1.94 இலட்சம் மதிப்பில் 12 மாற்றுத்தினாளிகளுக்கு திறன்பேசிகள், ரூ.3.43 இலட்சம் மதிப்பில் 3 மாற்றுத்தினாளிகளுக்கு பேட்டரியால் இயங்கும் சிறப்பு சக்கர நாற்காலி மற்றும் ரூ.2.10 மதிப்பில் 2 மாற்றுத்தினாளிகளுக்கு NeoMotion சக்கர நாற்காலி என மொத்தம் 17 மாற்றுத்தினாளிகளுக்கு ரூ.7.47 இலட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் செந்தில் வேல் முருகன், தனித் துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) சேக் அப்துல் காதர், மாவட்ட மாற்றுத்திறனாளி அலுவலர் திரு.தினேஷ் சந்திரன், அரசு அலுவலர்கள், பொது மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.